பக்கங்கள் 15+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | ஆனி 24 செவ்வாய்க்கிழமை 08.07.2025 | அதிர்வு 339

## மட்டக்களப்பில் ரயிலில் மோதி இளைஞர் பலி!

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கறுவப்பங்கேணியில் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை ரயிலில் மோதுண்டு இளைஞர் 02▶

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# சர்வதேச விசாரணைகளுக்கான சாட்சியமே செம்மணிப் புதைகுழி

## தமிழரசின் எம்.பி. சிறீதரன் சுட்டிக்காட்டு



”ஈழத்தமிழர்கள் மீதான இனப் படுகொலைகளுக்கோ, போர்க்குற்றங்களுக்கோ முள்ளிவாய்க்காலை மட்டும் சாட்சியமாகக் கொள்ள முடியாது. ஆனால், இலங்கை சுதந்திரமடைந்ததாகச் சொல்லப்படும் 1948களிலிருந்து இன்று வரை ஈழத்தமிழர்கள் மீது பௌத்த மேலாதிக்கவாதிகளால் புரியப்பட்ட மிக மோசமான படுகொலைகளுக்கான பிரதான சாட்சியமாக முள்ளிவாய்க்காலைப் போன்று, செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியை அடையாளப்படுத்தப்படுத்த முடியும்.”

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், 02▶

# தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக இரு நாள்கள் கவனவீர்ப்பு!

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு




யாழ். தையிட்டி பகுதியில் தனியார் காணிகளை ஆக்கிரமித்து இலங்கை இராணுவத்தால் அமைக்கப்பட்டுள்ள சட்டவிரோத விகாரைக் கட்டடத்துக்கு எதிராக நாளையும், நாளைமறு தினமும் முன்னெடுக்கப்படும் போராட்டத்தில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“இந்தப் போராட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக 02▶

# ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கி ஐந்து வயது சிறுவன் பரிதாப உயிரிழப்பு

ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கி ஐந்து வயது சிறுவன் ஒருவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

இந்தச் சம்பவம் அம்பாந்தோட்டை – மித்தெனிய பொலிஸ் பிரிவின் ஜுலம்பிட்டிய பகுதியில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

சிறுவன் ரம்புட்டான் பழங்களைச்



சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளான்.

ரம்புட்டான் விதை தொண்டையில் சிக்கி மேற்படி சிறுவன் உயிரிழந்துள்ளான் என்று பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மித்தெனிய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# விடுதியிலிருந்து கைப்பற்றப்பட்ட கைவிலங்கு: பொலிஸ் உத்தியோகத்தருக்கு விளக்கமறியல்!

கண்டி – தலதா வீதியில் உள்ள விடுதி ஒன்றிலிருந்து ஒரு ஜோடி கைவிலங்கு கைப்பற்றப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

களனி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் தெரியவருவதாவது, கடந்த சில நாட்களுக்கு முன்னர் கண்டி – தலதா வீதியில் உள்ள விடுதி ஒன்றில் கண்டி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது அறை ஒன்றிலிருந்து



ஒரு ஜோடி கைவிலங்கு கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இந்த கைவிலங்கு சிறைச்சாலைகள் திணைக்களத்துக்குச் சொந்தமானது எனத் தெரியவந்துள்ளது.

இதனையடுத்துப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையில் சந்தேகநபரான பொலிஸ் உத்தியோகத்தர் கண்டி பிரதேசத்தில் வைத்து கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் சுமார் ஒரு மாதத்துக்கு முன்னர் இந்தக் கைவிலங்கை பை ஒன்றுக்குள் வைத்து விடுதியிலேயே விட்டுவிட்டுச் சென்றுள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் கண்டி நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று திங்கட்கிழமை ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## தையிட்டி சட்டவிரோத...

தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் நாளை (ஜுலை 9 – புதன்கிழமை) மாலை 4:30 மணி முதல் 6:30 மணி வரை மற்றும் நாளைமறுதினம் (ஜுலை 10 – வியாழக்கிழமை) பௌர்ணமி தினத்தன்று காலை 6:30 மணி முதல் மாலை 6:00 மணி வரை கவனவீர்ப்புப் போராட்டமாக நடைபெறவுள்ளது.

விகாரை அகற்றப்பட்டு, காணிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என வலியுறுத்தும் நோக்கத்தோடு நடைபெறும் இந்தப் போராட்டத்தில் காணி உரிமையாளர்களும், பொதுமக்களும் இணைந்து பங்கேற்கவுள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் அனைத்து சமூகப் பிரதிநிதிகளும், குடிமக்களும் திரளாக பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்." – என்றுள்ளது.

## மட்டக்களப்பில்...

ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இன்று அதிகாலை 1.30 மணிக்கு மட்டக்களப்பில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற ரயிலில் மோதுண்டு கறுவப்பங்கேணி, அரோஸ் வீதியை சேர்ந்த எஸ்.நிசாந்தன் என்னும் 23 வயதுடைய இளைஞரே உயிரிழந்துள்ளார்.

ரயில் கடவையில் இருந்து தொலைபேசியில் உரையாடிக்கொண்டிருந்தவரே இவ்வாறு ரயிலில் மோதுண்டுள்ளார் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

சடலம், மோதிய ரயிலில் கொண்டு செல்லப்பட்டு ஏறாவூர் ரயில் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## சர்வதேச...

"செம்மணி – சித்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வுகளில் நேற்று வரை 52 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அகழப்படும் பகுதிகளில் இருந்து மழைநீரை வெளியேற்றுவதற்காக அமைக்கப்பட்ட கால்வாய்களில் கூட மூன்று இடங்களில் என்புச் சிதிலங்கள் தென்பட்டுள்ளன என்றால் இனப்படுகொலைக்கான வலுவான சாட்சியமாக அந்த மனிதப் புதைகுழியை அடையாளப்படுத்த முடியும். ஆனால், எழுபது ஆண்டு காலமாகத் தமிழர்கள் மீது புரியப்பட்ட இனப்படுகொலைக்கான நீதி விசாரணையை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியோடு நிறுத்திக்கொள்ள இந்த அரசும் தன்னாலான பிரயத்தனங்களை முன்னெடுக்கக்கூடும் என்ற அடிப்படையில், இன அழிப்புக்கான பொறுப்புக்கூறலும் பரிகார நீதியும் பரந்துபட்ட அளவில் அணுகப்பட வேண்டும் என்பதில் நாமும், நீதியை நாடும் எல்லாத் தரப்புகளும் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும்.

உலகின் மனச்சாட்சியை உலுக்கும் உணர்வு சார்ந்த படுகொலை அடையாளமான செம்மணி மனிதப் புதைகுழியோடு, மன்னார், கொக்குத்தொடுவாய், திருக்கேதீஸ்வரம், மண்டைதீவு உள்ளிட்ட மனிதப் புதைகுழிகள் தொடர்பிலும் முறையான நீதி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அதனடிப்படையில் 2009 ஆம் ஆண்டு போர் மௌனிக்கப்பட்ட போது, ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்டோர் காணாமல் ஆக்கப்பட்டும், கொகல்லப்பட்டும் உள்ளதாக அப்போதைய மன்னார் மறைமாவட்ட ஆயர் மறைந்த இராஜப்பு ஜோசப் வழங்கிய சாட்சியத்தின் அடிப்படையில் சர்வதேச விசாரணைகளுக்கான அடிப்படையாக செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் அணுகப்பட வேண்டும்." – என்றார்.



# ஓமந்தையில் விகாரை கட்டும் முயற்சி மக்கள் போராட்டத்தால் தடுத்து நிறுத்தம்

(கி.வசந்தன்)

வவுனியா, ஓமந்தை பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள அரச காணிக்குள் ஓமந்தைப் பொலிஸார் அத்துமீறிச் சென்று துப்புரவு செய்து அதில் விகாரை அமைக்க மேற்கொண்ட முயற்சி இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அந்தப் பகுதியில் கூடியவர்களால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

ஓமந்தையின் ஏ - 9 வீதியில் பொலிஸ் நிலையத்துக்கு அருகாமையில் தனியார் உரிமை கோரி வரும் அரச காணி ஒன்றைப் பொலிஸார் துப்புரவு செய்து அதைச் சுற்றி வேலி அமைக்க முற்பட்ட வேளை அங்கு கூடிய அரசியல்வாதிகள், பொதுமக்களால் நிறுத்தப்பட்டதோடு விகாரை அமைக்கும் முயற்சியும் நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் காணி தொடர்பில் கடந்த பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையில் அதைப் பொலிஸார் அபகரிக்கும் செயற்பாட்டை நிறுத்துமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஓமந்தைப் பொலிஸாருக்கு அந்த அரச காணியில் எவ்வித மான அபிவிருத்திப் பணிகளையும் மேற்கொள்ள வேண்டாம் எனப் பிரதேச செயலாளரால் எழுத்து மூலமான கடிதமும் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

எனினும், பொலிஸார் அந்தக் காணியைச் சுத்தம் செய்து அதனைச் சுற்றி வேலி அமைக்கும் பணியில் இன்று ஈடுபட்டிருந்தனர். இதையடுத்து அங்கு கூடிய வவுனியா மாநகர சபையின் மேயர் சு.காண்டீபன், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையின் தவிசாளர் பி. பாலேந்திரன், வவுனியா வடக்கு பிரதேச சபையின் உப தவிசாளர் எஸ்.சஞ்சுதன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வவுனியா மாவட்ட அமைப்பாளர் எஸ். தவபாலன் உட்பட முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் செ. மயூரன், மாநகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு எதிர்ப்புத் தெரிவித்ததோடு குறித்த காணிக்குள் பிரவேசித்து அங்கிருந்த பொலிஸாரையும் அகற்றினர்.

இதையடுத்து பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பொலிஸ் பொறுப்பதிகாரியுடனும் அவர்கள் கலந்துரையாடினர்.

இதன்போது பொலிஸ் பொறுப்பதிகாரி குறித்த காணியில் விகாரை அமைக்கும் திட்டம் இல்லை எனவும், தமது கட்டுப்பாட்டில் 2009 ஆம் ஆண்டில் இருந்து அந்தக் காணி காணப்படுகின்றது எனவும், அதைத் தமது மைதான தேவைக்காகவே புனரமைப்பதாகவும், எவ்விதமான கட்டடங்களும் கட்டப்படாது எனவும் தெரிவித்ததை அடுத்து அங்கு கூடியிருந்தவர்கள் கலைந்து சென்றனர்.

எனினும், அந்தக் காணியைப் பொலிஸார் அபகரிப்பதற்கு விட முடியாது எனவும், அவ்வாறு அபகரிக்கும் பட்சத்தில் தொடர்ந்தும் தமது போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவும் அங்கு குழுமியிருந்தவர்கள் தெரிவித்தனர்.

எனினும், காணிக்கு வேலி இடும் பணிகள் தொடர்ந்தும் தற்போதும் நடைபெற்று வருகின்றன.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## மீண்டும் பழையபடி....!

'பழைய குருடி கதவைத் திறவடி!' என்ற கதையாக தற்போதைய அரசும் பாதாள உலக குழுக்களுக்கு எதிரான தனது நடவடிக்கையை தீவிர படுத்தியிருப்பதாக அறிவித்திருக்கிறது. ஏற்கனவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிக் காலத்தில் அப்போது இருந்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரிரான் அலஸ் மற்றும் இப்போது பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டு விசாரணையை எதிர்கொண்டிருக்கும் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் ஆகியோர் இதே போன்ற பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் ஒன்றைப் பாதாள உலகக் குழுவினருக்கு எதிராகத் தொடுத்திருந்தனர். இதன் மூலம் பாதாள உலகக் குழுக்கள் மற்றும் போதை வஸ்து வர்த்தகம், கடத்தல், பாவனையில் ஈடுபட்டிருந்த பலர் கைது செய்யப்பட்டனர். அத்தரப்புகளின் செயற்பாடுகள் அப்போது ஓரளவுக்கு ஒடுக்கப்பட்டன என்பதும் உண்மை.

ஆனால் அந்தப் பெயரில் பெருமளவு அத்துமீறல்கள், அடாவடித்தனங்கள், அராஜகங்கள் பாதுகாப்பு தரப்பினால் மேற்கொள்ளப்பட்டன என குற்றச்சாட்டுகளும் தாராளமாக வெளிவந்தன. 'என்கவுண்டர்' மரணங்கள் கூட இடம்பெற்றன.

புதிய அரசின் வரவோடு அந்த நடவடிக்கைகள் எல்லாம் அப்படியே படுத்து விட, இப்போது மீண்டும் பாதாள உலகக் குழுக்கள் தமது கைவரிசையைக் காட்டத் தொடங்கியுள்ளன.

இந்த வருடத்தில் முதல் ஆறு மாதங்களில் அறுபதுக்கும் மேற்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நாட்டில் நடந்துள்ளன. இதன் விளைவாக குறைந்தது நாற்பது பேர் கொல்லப்பட்டனர். முப்பதுக்கும் அதிகமானோர் காயம் அடைந்தனர். இவற்றில் நாற்பத்தியைந்து சம்பவங்கள் நேரடியாக பாதாள உலகக் குற்றங்களுடன் தொடர்புபட்டவை என்று பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர். கடந்த சனிக்கிழமை கொஸ்கமாவின் சுடுவெல்லவில் நடந்த மிகச் சமீபத்திய துப்பாக்கிச் சூட்டில் 12 வயது சிறுமி உட்பட மூன்று பேர் காயமடைந்தனர்.

அதிகரித்து வரும் பாதாள உலகக் குழுக்களின் குற்றங்களுக்கு மத்தியிலேயே அந்த தரப்பினரை அடக்குவதற்கான கூட்டு நடவடிக்கையை ஆரம்பித்து இருப்பதாக பாதுகாப்பு அதிகாரிகள் அறிவித்திருக்கின்றனர்.

ஜூலை 4 ஆம் தேதி, மேல் மாகாணத்தில் கந்தானை, ஜா-எல, வத்தளை மற்றும் ராகம ஆகிய இடங்களில் இரவு முழுவதும் நடத்தப்பட்ட சோதனைகளில் முந்நூறுக்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கைகளில் சீரற்ற வாகன சோதனைகளும் அடங்கும்.

ஜூலை 5 ஆம் தேதி, காலி, மாத்தறை மற்றும் எல்பிட்டிய ஆகிய இடங்களில் இரவு 7 மணி முதல் இரவு 11 மணி வரை நடத்தப்பட்ட நடவடிக்கையில் மொத்தம் 457 பேர் கைது செய்யப்பட்டனர். முன்கூட்டியே கிடைத்த உளவுத்துறை தகவல்களின் அடிப்படையில் இந்தச் சோதனைகள் மற்றும் தேடுதல்கள் மூலம் முக்கிய இடங்கள் குறிவைக்கப்பட்டன என்று கூறப்பட்டது.

ஜூலை 6 ஆம் தேதி, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டி, சீதாவகபுர மற்றும் கேகாலை ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட கூட்டு நடவடிக்கையில் 120 பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்களில் 23 பேர் நிலுவையில் உள்ள பிடி விறாந்துகளுடன் இருந்தனர். 19 பேர் மீது மது அருந்தி வாகனம் ஓட்டினர் எனக் குற்றம் சாட்டப்பட்டது. பொலிஸ், விசேட அதிரடிப் படை மற்றும் ஆயுதப்படைகளைச் சேர்ந்த ஏறத்தாழ 900 பேர் இந்த நடவடிக்கையில் பங்கேற்றனர்.

வரும் வாரங்களில் தீவு முழுவதும் இந்த தீவிரப்படுத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கைகள் தொடரும் என்று பொது பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சு தெரிவித்துள்ளது. நீண்டகால பாதுகாப்பு, ஸ்திரத்தன்மை மற்றும் இந்த தேசிய குற்ற எதிர்ப்பு முயற்சிகளின் வெற்றியை உறுதி செய்வதற்கு சமூக ஆதரவு அவசியம் என்று கூறி, பொதுமக்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும் என்றும் அமைச்சகம் வலியுறுத்தியது.

நாட்டில் பாதாள உலகக்குழுக்களின் செயற்பாடுகளை அடியோடு ஒடுக்குவது என்பது ஒருவகையில் நாய் வாலை நிமிர்த்தும் வேலை போன்றதுதான்.





# மட்டக்களப்பில் பத்மநாபா அமைப்பின் 35ஆவது தியாகி தினம் அனுஷ்டிப்பு!

## 200 பேருக்கு நிதி உதவி வழங்கி வைப்பு






**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு மகிழடித்தீவில் பத்மநாபா அமைப்பின் 35 ஆவது தியாகிகள் தினத்தை முன்னிட்டு "மக்கள் இல்லாத மண்ணை நேசிக்கவில்லை மக்களுக்காகவே மண்ணை நேசிக்கின்றோம்" எனும் தொனிப் பொருளில் காத்தான்குடி, கொக்கட்டிச்சோலை, அருந்தலாவ, வெருகல் படுகொலையில் கொல்லப்பட்டவர்களுக்கான நினைவேந்தல் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்றது.

பத்மநாபா மக்கள் முன்னணி மகிழடித்தீவு அமைப்பின் ஏற்பாட்டில் ஜுன் 19 தியாகிகள் தினத்தின் 35 ஆவது நினைவேந்தல் மகிழடித்தீவு கலாசார மண்டபத்தில் சோலையூரான் என்று அழைக்கப்படும் ஜோதி தோழரின் அனுசரணையுடன் முன்னணி அமைப்பின் செயலாளர் ஜே. வினோகாந்தன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நினைவேந்தலில் அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு, சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர சபை உறுப்பினர் முனிசாமி உதயராஜ், சமூக செயல்பாட்டாளர் தோழர் சுகு, சமூக செயல்பாட்டாளர் தோழர் செங்கதிரோன் கோபால கிருஷ்ணன், மண்முனை தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் ஆலய தலைவர், உறுப்பினர்கள், மகிழடித்தீவு விளையாட்டு கழக உறுப்பினர்கள், மகிழடித்தீவு பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மட்டக்களப்பு அம்பாறை பத்மநாபா மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.ஆர்.எல். எவ். செயளாலர் தோழர் சலீம், முன்னணி உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது தோழர் பத்மநாபாவின் திருவுருவப் படத்துக்கு மலர் அணிவித்து ஈகைச்சுடர் ஏற்றி மலர் தூவி சுடர் ஏற்றி இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்திய பின்னர் நலிவுற்ற குடும்பப் பெண்கள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்ப பெண்கள் 200 பேருக்கு நிதி உதவியும், உயர்தரபரீட்சை சித்தி அடைந்து பல்கலைக் கழகத்துக்குத் தெரிவான மண்முனை தென்மேற்கு பிரதேச மாணவர்களுக்கான கல்வி ஊக்குவிப்புக்கான நிதி உதவிகளும் வழங்கி வைத்தனர்.







# சந்நிதியான் ஆச்சிரமத்தில் திருவாசகம் முற்றோதல்

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், வழமைபோல் ஒவ்வொரு பூரணை தினத்திலும் திருவாசகம் முற்றோதல் செய்யப்பட்டு வருகின்றது.

அந்த வகையில் நாளை மறுதினம் வியாழக்கிழமை திருவாசகம் முற்றோதல், ஆச்சிரம மண்டபத்தில் காலை 6 மணி தொடக்கம் பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது.

# அட்டாளைச்சேனை பிரதேச செயலருடன் அபிவிருத்தி சம்மந்தமாகக் கலந்தாய்வு!

(எம். எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளருடன் அபிவிருத்தி சம்மந்தமான கலந்துரையாடல் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட தீகவாபி பிரதேசத்தின் விளையாட்டு மைதானம் மற்றும் பாலமுனையில் அமைந்துள்ள எல்.ஆர்.சி.காணி சம்மந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் சட்ட விரோதமாக மண் ஏற்றும் விடயம் தொடர்பிலும் பேசப்பட்டது.

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெவ்வை மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி பொத்துவில் தொகுதி அமைப்பாளர் யூ.கெ. ஆதம்லெப்பை, அட்டாளைச்சேனை பிரதேச சபை தீகவாபி உறுப்பினர் சில்வா ஆகியோர் அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் செயலாளர் ஏ.சி. அகமட் அப்கருடன் இது தொடர்பில் கலந்துரையாடினர்.



சம்மந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் அதற்கான தீர்வை மேற்கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டது.





# திருகோணமலை கலைமகள் வித்திக்கு ரூ.60 ஆயிரம் பெறுமதியான இசைக்கருவி

**(ஹஸ்பர் ஏ.எச்.)**

திருகோணமலை வலயத்துக்கு உட்பட்ட கலைமகள் மகா வித்தியாலத்துக்கு 60 ஆயிரம் ரூபா பெறுமதியான இசைக்கருவி புலம்பெயர் உறவினர் ஊடக இலங்கை தமிழரசு கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சண்முகம் குகதாசனால் வழங்கப்பட்டன.

நேற்று (07) பாடசாலையில் வைத்து வழங்கி வைதுப் பாடசாலையின் அதிபர் சட்சிவானந்தம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பட்டினமும் சூழலும் பிரதேச சபை உறுப்பினர் துரைராசா தனராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் போது தமிழ் மொழி தினப் போட்டியில் வலய மட்ட, மாகாண மட்டத்தில் பங்கேற்று வெற்றிபெற்றவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன.











# கைதடி நவபுரம் – மட்டுவில் கிராம வீதியின் புனரமைப்பின் தேவைப்பாடு எடுத்துரைப்பு



(த.சுபேசன்)

பசுந்தேசம் அமைப்பின் அழைப்பின் பேரில் கைதடிக்கு விஜயம் மேற்கொண்ட சாவகச்சேரிப் பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உபதவிசாளர் ஆகியோர் உள்ளிட்ட கைதடிப் பிரதேச உறுப்பினர்கள் கைதடி நவபுரம் – மட்டுவில் கிராம இணைப்பு வீதி நீண்ட காலமாக புனரமைப்பு இல்லாமல் இருப்பது தொடர்பாக பார்வையிட்டிருந்தனர்.

அதன்போது பிரதேச சபை உறுப்பினர் கதிர்காமன் சிவபாதம், மட்டுவிலில் அமைந்துள்ள யாழ். பொருளாதார மத்திய நிலையம் இயங்கத் தொடங்கும் போது, கைதடி பகுதி விவசாயிகள் தமது உற்பத்தி பொருள்களை கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு இந்த வீதி இலகுவானது மற்றும் தூரம் குறைந்ததாக இருக்கும் எனச் சுட்டிக்காட்டியிருந்தார்.

இது தொடர்பில் கலந்தாலோசித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று சாவகச்சேரிப் பிரதேச சபை ெ தரிவித்துள்ளது.





# ‘நீர்த்த கடல்’ ஆவணப்படம் திரையிடல்!

எழுநாவால் தயாரித்து வெளியிடப்பட்ட ‘நீர்த்த கடல்’ என்ற தலைப்பிலான ஆவணப்படமானது, மட்டக்களப்பிலுள்ள ‘மூவி கிளப்’ பின் ஒழுங்கமைப்பில் கடந்த 21 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் ‘American Corner’ இல் திரையிடப்பட்டது. இந்த நிகழ்வில் சமூக ஆர்வலர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர்.

இந்தத் திரையிடலில் பங்குபற்றியிருந்த பார்வையாளர்களில் ஒருவரான கேஷாயினி எட்மண்ட் கருத்துத் தெரிவிக்கையில்,

இது காலத்தின் தேவை கருதியதொரு ஆவணப்படம். இதன் காட்சியமைப்புகள் எனக்குப் பிடித்திருந்தன. குறித்த விடயம்சார் நூலை எழுதியவரது நேர்காணலை உள்ளடக்கியிருந்தமை மிகவும் வரவேற்கத்தக்கது.

பலரும் இப்போது சுற்றாடல்சார் பிரச்சினைகள் தொடர்பாகக் கவனஞ் செலுத்த ஆரம்பித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

ஆவணப்படத்தின் நேரத்தைச் சுருக்குவது, சுவாரசியமாக்குவது, தொழில்நுட்பத் தரம் போன்றன குறித்தும் சிந்திக்க வேண்டும். பெண்களது நேர்காணல்களும் இடம்பெற்றிருக்க வேண்டும்.- என்றார்.

வடக்கு - கிழக்குத் தமிழர் தேசக் கடற்பரப்பில் கடல் விவசாயம் எனும் போர்வையில் அமைக்கப்படும் கடலட்டை வளர்ப்புப் பண்ணைகள் மூலம் கடலைச்சார்ந்த தமிழ் மக்களின் இறைமையும், நிலைத்த பொருண்மிய வளங்களும் எவ்வாறு சவாலுக்கு உட்படுத்தப்படுகின்றன. சூழல் சமநிலையும், கடலோரப் பகுதியில் வாழும் மக்களின் வாழ்வும் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பவை பற்றி குறித்த ஆவணப்படமானது ஆராய்கின்றது.












# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அம்பாறை மாவட்டத்துக்கு!



(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்துக்கான புதிய பொலிஸ் அத்தியட்சகராக சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.பி.எச். கலனசிறி நேற்று (07) அம்பாறை பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் தனது கடமைகளை ஆரம்பித்தார்.

அனைத்து மதத் தலைவர்களின் ஆசிர்வாதத்துடன் சுப நேரத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அம்பாறை மாவட்டத்தின் முன்னாள் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகராக கடமையாற்றிய பொலிஸ் அத்தியட்சகர் சனத் அமரசிங்க கம்பஹா மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து ஏற்பட்ட வெற்றிடத்துக்குப் பண்டாரவளைப் பிரிவின் பொறுப்பாளராக செயற்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் டி.பி.எச். கலனசிறி அம்பாறை மாவட்டத்தின் 31 ஆவது பொலிஸ் அத்தியட்சகராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அம்பாறை மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் அம்பாறை தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட அம்பாறை மாவட்ட பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# ஐஸ் மற்றும் ஹெரோயினுடன் கைதான மூன்று சந்தேக நபர்களிடம் விசாரணை!

(பாறுக் ஷிஹான்)

இரண்டு மோட்டார் சைக்கிள் மூலம் போதைப் பொருள்களைக் கடத்திய நிலையில் கைதான மூன்று சந்தேக நபர்களிடம் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அட்டாளைச்சேனை டீன் மாவத்தை ஊடாக போதைப் பொருள்கள் கடத்தல் மேற்கொள்ளப்படுவதாகக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமையக் கடந்த ஞாயிற்றுக்கிழமை சோதனை நடவடிக்கையைப் பொலிஸார் மேற்கொண்டனர்.

இதன்போது அந்தப் பகுதியால் இரண்டு மோட்டார் சைக்கிளில் வருகை தந்த மூவரை கைது செய்த அக்கரைப்பற்று பொலிஸார் அவர்கள் வசம் இருந்து போதைப் பொருள்களை மீட்டுள்ளனர்.

இதன்போது 84 கிராம் 620 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளை வைத்திருந்த சந்தேக நபர் மன்னார் நீதிமன்றத்தின் திறந்த பிடிவிறாந்து பெற்ற நபர் என்பது தெரியவந்தது.

அத்துடன் மற்றுமொரு சந்தேக நபர் வசம் இருந்து 24 கிராம் 940 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் மூன்றாவது சந்தேக நபரிடம் இருந்து 31 கிராம் 5 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

அத்துடன் கைதான மூன்று சந்தேக நபர்களும் பயணித்த இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் மீட்ட பொலிஸார் சட்ட நடவடிக்கைக்காக அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இந்த நடவடிக்கையானது அம்பாறை பிரதிப் பொலிஸ் மா அதிபர் சுஜித் வெதமுல்லவின் பணிப்புரையின் பேரில் அம்பாறை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஹேமந்த செனவிரத்னவின் மேற்பார்வையில் அக்கரைப்பற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நுவன் தண்டநாராயணன் தலைமையில் அக்கரப்பற்று பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதம பரிசோதகர் டபிள்யூ.டி.எல்.ஜி.விமலதாஸ தலைமையிலான பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# அக்கரைப்பற்று வைத்தியசாலையில் கல்முனை சாரணர் சங்க சிரமதானம்

(எம்.எப்.றிபாஸ்)

ஜனாதிபதியின் விசேட வேலைத் திட்டத்தின் கீழ் இலங்கை சாரணர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைய அக்கரைப்பற்று, கல்முனை மாவட்ட சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் சிரமதான நிகழ்வு இடம்பெற்றது.

மாவட்ட சாரண ஆணையாளர் எம். ஐ. உதுமாலெப்பை தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் மாவட்டத்தின் பல பாடசாலைகளில் இருந்து சாரணர்களும்சாரணஆசிரியர்களும்கலந்துகொண்டனர்.

இதேவேளை, வைத்தியசாலையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், சாரணர் சங்கத்தின் உதவி மாவட்ட ஆணையாளர்கள், சங்க நிர்வாகிகள் எனப் பலரும் சிரமதான நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.







# சத்துருக்கொண்டான் சௌபாக்கியா வீட்டுத்திட்ட மக்களது பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை!

**(வாலகிருஸ்ணா)**

மட்டக்களப்பு மாநகரசபைக்கு உட்பட்ட சத்துருக்கொண்டான் சௌபாக்கியா வீட்டுத்திட்ட பகுதி மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு மற்றும் மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் சிவம்பாக்கியநாதன் ஆகியோர் உறுதியளித்துள்ளனர்.

சத்துருக்கொண்டான் சௌபாக்கியா வீட்டுத்திட்ட பகுதி மக்கள் தொடர்ச்சியாகப் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டுவந்த நிலையில் இன்றைய தினம் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு மற்றும் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் சிவம்பாக்கியநாதன், பிரதி முதல்வர் டினேஸ், மாநகரசபை உறுப்பினர் ரகுநாதன் ஆகியோர் குறித்த பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டனர்.

சத்துருக்கொண்டான் சௌபாக்கியா வீட்டுத் திட்டம் கடந்த நல்லாட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டாலும் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தால் குறித்த பகுதியில் குடியமர்த்தப்பட்டுள்ள மக்கள் தொடர்ச்சியான கஸ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நல்லாட்சிக் காலத்தில் முறையான தெரிவுகள் முன்னெடுக்கப்படாமல் குறித்த பகுதியில் 139 இற்கும் அதிகமான வீடுகள் அமைக்கப்பட்டுள்ள போதிலும் 30 வீடுகளிலேயே மக்கள் குடியிருக்கின்றனர்.

ஏனைய வீடுகள் கைவிடப்பட்ட நிலையில் காணப்படுகின்றன. இதனால் இந்தப் பகுதியில் சட்ட விரோத செயற்பாடுகள் அதிகரித்துள்ளன என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

வீட்டுத் திட்டம் அமைக்கப்பட்ட காலம் தொடக்கம் முறையான வீதிகள், குடிதண்ணீர் வசதிகள், வடிகான் வசதிகள்,போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் குறித்த பகுதி மக்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்நோக்கி வருகின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் பெருமளவான வீதிகள் மணல் வீதிகளாக காணப்படுகின்றன. இதனால் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

புன்னைக்குடா – பாலமீன்மடு பிரதான வீதியை ஒட்டியதாக சத்துருக்கொண்டான் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்த வீட்டுத் திட்டத்தில் அடிப்படை வசதிகள் இல்லாத காரணத்தாலேயே தமது வீடுகளுக்கு வந்து வதிவதற்கு தயங்குவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் நீண்டதூரம் செல்ல வேண்டிய நிலையில் பொதுப் போக்குவரத்துகள் எதுவும் இல்லை. பிரதான வீதியில் செல்லுவோரை நிறுத்தி தமது பிள்ளைகளை பாடசாலைகளுக்கு அனுப்பும் நிலைமையே காணப்படுகிறது என்றும் பெண் பிள்ளைகளை பாடசாலைக்கு வேறு நபர்களுடன் அனுப்பிவிட்டு அச்சத்துடனேயே உள்ளனர் எனவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அப்பகுதி மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் முதல்வர் ஆகியோர் குறித்த பகுதியில் நிலவும் தற்காலிக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை உடனடியாக முன்னெடுப்பர் என்று தெரிவித்தனர்.

தற்காலிக வீதிகளை புனரமைப்பதற்கும் குடி தண்ணீரைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக இங்கு மட்டக்களப்பு மாநகரசபை முதல்வரால் தெரிவிக்கப்பட்டது.

அதேபோன்று கைவிடப்பட்ட வீடுகளின் மீளகுடியமர்த்தவும் அந்தப் பகுதியில் காணப்படும் குறைபாடுகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான பணிப்புரைகளை அதிகாரிகளுக்கு தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு விடுத்தார்.

அத்துடன் எதிர்வரும் வரவு – செலவுத் திட்டம் ஊடாக நிரந்தரமான வீதிகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் குறித்த பகுதியில் மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கையை முன்னெடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஏழை மாணவர் விடுதிகள் இனி 'சமூக நீதி விடுதிகள்'

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு







தமிழகம் முழுவதும் பல்வேறு அரசுத் துறைகளின் கீழ் செயல்பட்டு வரும் பாடசாலை மற்றும் கல்லூரி மாணவர்களுக்கான விடுதிகள் இனி 'சமூக நீதி விடுதிகள்' என அழைக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"பாடசாலைகளில் ஏற்படும் சாதிய மோதல்களைத் தடுப்பதற்கான வழிமுறைகளை ஆராய ஓய்வுபெற்ற நீதியரசர் சந்துரு தலைமையில் ஒரு ஆணையத்தை தமிழ்நாடு அரசு அமைத்தது. நீதியரசர் சந்துரு மிக முக்கியமான பல்வேறு பரிந்துரைகளை தமிழ்நாடு அரசுக்கு வழங்கி இருக்கிறார். சாதி முன்னொட்டு பெயர்களுடன் அரசு பாடசாலைகள் இருப்பதை நீக்க வேண்டும், அரசு, தனியார் பாடசாலைகளில் பெயர்களோடு உள்ள சாதி முன்னொட்டுகளையும் பின்னொட்டுகளையும் நீக்க வேண்டும் என்று இந்த ஆணையம் பரிந்துரை செய்துள்ளது. பாடசாலையின் பெயரில் சாதி இருக்கக் கூடாது. தனிமனிதர் பெயரில் வைத்திருந்தால் அந்தப் பெயரோடும் சாதி இருக்கக் கூடாது என்று சொல்லப்பட்டு இருந்தது. இதனை தமிழ்நாடு அரசு நன்கு பரிசீலித்தது.

நமது சமுதாயத்தின் பல்வேறு பின்தங்கிய பிரிவுகளைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் தொடர்ந்து கல்விப் பயின்றிட, நமது மாநிலமெங்கும் பல்வேறு அரசுத் துறைகளின்கீழ் பாடசாலை மற்றும் கல்லூரி மாணவ மாணவியர் விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் துறையின்கீழ் செயல்பட்டு வரும் 727 பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் 41,194 மாணவ மாணவிகளும், 455 மிகப் பிற்படுத்தப்பட்டோர் நல விடுதிகளில் 26,653 மாணவ மாணவிகளும். 157 சீர்மரபினர் விடுதிகளில் 9,372 மாணவ மாணவிகளும், 20 சிறுபான்மையினர் நல விடுதிகளில் 1,250 மாணவ மாணவிகளும் தங்கிப் பயின்று வருகின்றனர்.

இந்த மாணவ மாணவிகளின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு நடவடிக்கைகளைக் கடந்த நான்கு ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள அடித்தட்டுக் குடும்பங்களைச் சார்ந்த இந்த மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றும் அதே வேளையில், நமது எதிர்கால சமுதாயத்தை ஒரு சமத்துவ சமூகமாக உருவாக்கிட, சாதி சமய உணர்வுகளைக் களைவது இன்றியமையாதது. இந்த நோக்கத்தோடு தமிழ்நாடு அரசு எடுத்து வரும் பல்வேறு நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக, தற்போது பல்வேறு சாதி சமயப் பிரிவுகளின் பெயர்களின்கீழ் செயல்பட்டு வரும் மாணவர் விடுதிகளின் பெயர்களை மாற்றிட தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இதன்படி, பல்வேறு துறைகளின் கீழ் செயல்பட்டு வரும் ஏழை மாணவர்களுக்கான பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள் 'சமூக நீதி விடுதிகள்' என்ற பொதுப் பெயரால் இனி அழைக்கப்படும். விடுதிகளுக்கு புதிய பெயர் சூட்டப்பட்டுள்ளதே தவிர. மாணவர்களுக்கான உரிமைகள், சலுகைகள், உதவிகள் அனைத்தும் அப்படியே தொடரும். அதில் எந்த மாற்றமும் இருக்காது. இவ்விடுதிகளில் நமது பெரும் தலைவர்களின் பெயர் சூட்டப்பட்டு செயல்பட்டு வரும் சில விடுதிகளும் உள்ளன. அந்த விடுதிகள் அத்தலைவர்களின் பெயரோடு சமூக நீதி விடுதி என்று சேர்த்து அழைக்கப்படும்." என்று குறிப்பிட்டுள்ளார்.

# போராட்டத்தில் குதிக்கும் தமிழக வெற்றிக் கழகம்



தமிழ்நாட்டின், மதுரை திருப்புவனம் பகுதியில் பொலிஸ் சித்திரவதையால் அஜித்குமார் என்ற தனியார் பாதுகாப்புப் பணியாளர் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு நீதி கோரி தமிழக வெற்றிக் கழகம் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளது.

முன்னதாக இந்த போராட்டத்தை ஜூலை 3ஆம் திகதி எழும்பூரில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

இருப்பினும் போராட்டம் நடத்துவதற்கு பொலிஸ் அனுமதி கிடைக்காததால், அந்த போராட்டம் பிற்போடப்பட்டது.

இந்தநிலையில் அஜித்குமாரின் மரணம் தொடர்பான தமிழக வெற்றிக் கழகத்தின் போராட்டத்திற்கு, சென்னை மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி நீதிமன்ற உத்தரவையடுத்து போராட்டத்திற்கு பொலிஸ் அனுமதி வழங்கியுள்ளதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

இதற்கமைய இந்த போராட்டம் விரைவில் முன்னெடுக்கப்படும் என தமிழக வெற்றிக் கழகம் குறிப்பிட்டுள்ளது.




# அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்புகளுக்கு பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பு கண்டனம்

அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்புகள் பெரும் கவலைகளை ஏற்படுத்தி இருப்பதாகவும், பொருளாதார ரீதியில் நிச்சயமற்ற தன்மையை உருவாக்குவதாகவும் பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பு குற்றம் சாட்டியுள்ளது. எனினும், இந்த விவகாரத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் பெயர் குறிப்பிடாமல் தவிர்க்கப்பட்டமை கவனிக்கத்தக்கது.

இது குறித்து பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள அறிவிப்பில், அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்புகள் குறித்து மறைமுகமாக விமர்சிக்கப்பட்டுள்ளது. வரி உயர்வு தீவிர கவலைகளை அளிப்பதாகவும், அவை உலக வர்த்தக அமைப்பின் விதிகளுக்கு முரணாக இருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. உலக அளவில் வர்த்தகம் குறையவும், விநியோகச் சங்கிலிகள் சீர்குலையவும், நிச்சயமற்ற தன்மை ஏற்படவும் இவை வழிவகுக்கும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2035 வரை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜி.டி.பி) 5 வீதத்தை இராணுவ செலவினங்களுக்கு கூடுதலாகச் செலவிடுவது என்ற நேட்டோ நாடுகளின் முடிவை பிரேசில் ஜனா திபதி லூயிஸ் இனாசியோ லுலா டா சில்வா கடுமையாக விமர்சித்தார். சமாதானத்துக்காக செலவிடுவதை விட போருக்காக செலவிடுவது எப்போதுமே எளிதானது என்று அவர் விமர்சித்தார்.

ஈரான் மீதான தாக்குதல்களுக்கு பிரிக்ஸ் நாடுகளின் கூட்டமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது. எனினும், அந்த தீர்மானத்தில் இஸ்ரேல் பெயரோ, அமெரிக்காவின் பெயரோ இடம்பெறவில்லை. காசாவில் மக்கள் எதிர்கொள்ளும் சவால்கள் தீவிர கவலையை ஏற்படுத்தி இருப்பதாகத் தெரிவித்துள்ள பிரிக்ஸ் நாடுகள், பிணைக் கைதிகள் அனைவரையும் ஹமாஸ் விடுவிக்க வேண்டும் என்றும், பேச்சுவார்த்தைக்கு இஸ்ரேல் திரும்ப வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும், இஸ்ரேல், பாலஸ்தீனம் ஆகிய இரு நாடுகளையும் அங்கீகரிப்பதே பிரச்சினைக்குத் தீர்வு என்றும் பிரிக்ஸ் யோசனை தெரிவித்துள்ளது. உக்ரைன் - ரஷ்யா போர் தொடர்பான தீர்மானத்தில், ரஷ்யா மீது உக்ரைன் நடத்திய சமீபத்திய தாக்குதல்களுக்கு கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.










# ஜப்பான் உள்ளிட்ட 14 நாடுகளுக்கு வரிகளை உயர்த்தியது அமெரிக்கா

## பட்டியலை வெளியிட்டார் ட்ரம்ப்

ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகளுக்கு 25 சதவீத விதிக்கப்படுவதாக அறிவித்த சில மணி நேரங்களில், மேலும் 12 நாடுகளுக்கு வரிகளை உயர்த்தியுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பட்டியலிட்டுள்ளார்.

மியான்மர், தென்னாபிரிக்கா, மலேசியா, பங்களாதேஷ், தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளுக்கு வரிகளை அவர் உயர்த்தியுள்ளார்.

அந்த நாடுகளுக்கு அனுப்பிய கடிதத்தின் அடிப்படையில், தனது ட்ரூத் சமூக வலைதளத்தில் ட்ரம்ப் வெளியிட்டுள்ள பட்டியல்,

தென் கொரியா - 25 வீதம் வரி
ஜப்பான் - 25 வீதம் வரி
மியான்மர் - 40 வீதம் வரி
லாவோஸ் - 40 வீதம் வரி
தென்னாபிரிக்கா - வீதம் வரி
கஜகஸ்தான் - வீதம் வரி
மலேசியா - வீதம் வரி
துனீசியா - வீதம் வரி
இந்தோனேசியா - வீதம் வரி
போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா - வீதம் வரி
பங்களாதேஷ் - 35வீதம் வரி
செர்பியா - 35வீதம் வரி
கம்போடியா - 36வீதம் வரி
தாய்லாந்து - 36வீதம் வரி

மேலும் "அமெரிக்காவுக்கு எதிரான இந்த நீடித்த வர்த்தக பற்றாக்குறைக்கு காரணமான பல ஆண்டு கால வரி மற்றும் வரி அல்லாத கொள்கைகள் மற்றும் வர்த்தக தடைகளை சரிசெய்ய இந்த வரிவிதிப்பு அவசியம் என்பதை தயவுசெய்து புரிந்து கொள்ளுங்கள். இந்த பற்றாக்குறை எங்கள் பொருளாதாரத்துக்கும், எங்கள் தேசிய பாதுகாப்புக்கும் ஒரு பெரிய அச்சுறுத்தலாகும்." என்று இந்த நாடுகளுக்கு எழுதிய கடிதத்தில் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த வரிவிதிப்பு எதிர்வரும் ஓகஸ்ட் 1 முதல் அமலுக்கு வரும் என்று ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலைதளத்தில் தெரிவித்துள்ளார்.



# ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து இஸ்ரேல் தாக்குதல்

ஏமனில் ஹவுதி கிளர்ச்சியாளர்களின் பல இலக்குகளை இஸ்ரேல் தாக்கியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கிளர்ச்சியாளர்கள் தங்கியுள்ள மூன்று துறைமுகங்களைக் குறிவைத்து இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செங்கடலில் பயணிக்கும் வர்த்தக கப்பல்களை ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தாக்கி வருவதால் இஸ்ரேல் இந்த தாக்குதல்களை நடத்தியதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை | 08/07/2025

## கனேடிய தொழிலாளர்களுக்கு கிடைக்கும் அதிக கொடுப்பனவு

எதிர்வரும் 11ஆம் திகதி முதல் கனேடிய தொழிலாளர்கள், கனடா தொழிலாளர் நலத்திட்டத்திலிருந்து (CWB) அதிக ஊதியங்களைப் பெறுவார்கள். C02



# இனப்படுகொலையால் தமிழர்கள் சுமக்கும் பேரழிவை நான் புரிந்துகொள்கின்றேன்

## கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு

**இனப்படுகொலை காரணமாக கனடாவில் வாழும் தமிழ் மக்கள் சுமக்கும் பேரழிவை நான் புரிந்துகொள்கின்றேன் என கனடா பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**

**கடந்த மாதம் கனடா தமிழர்களிற்கும் பொதுபாதுகாப்பு அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரிக்கும் எதிராக முன்னெடுக்கப்பட்ட இனவெறி பிரச்சாரங்களை தொடர்ந்து கனடா பிரதமர் கனடா தமிழர்களிற்கான தனது ஆதரவை வெளியிட்டுள்ளார்.**

கனடிய தமிழர்களின் தேசிய அவைக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தமிழ் கனடியர்கள் சுமக்கும் நீடித்த வலி மற்றும் பேரதிர்ச்சியை நான் உணர்ந்துகொள்கின்றேன் என கனடா பிரதமர் தெரிவித்துள்ளார்.

கனடா தமிழர்கள் தாங்கள் எதிர்கொண்ட இனப்படுகொலை காரணமாக எதிர்கொண்டுள்ள வலி இழப்பு பேரழிவு ஆகியவற்றை நான் புரிந்துகொள்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

# 25 ஆண்டுகளாக அமெரிக்காவில் வாழ்ந்துவரும் கனேடிய பெண்ணை கைது செய்த அதிகாரிகள்

25 ஆண்டுகளாக அமெரிக்காவில் வாழ்ந்துவரும் கனேடிய பெண் ஒருவரை அமெரிக்க அதிகாரிகள் கைது செய்து தடுப்புக்காவலில் அடைத்துள்ளார்கள் .

அந்தப் பெண்ணின் கணவரோ ட்ரம்ப் ஆதரவாளர். தான் ட்ரம்புக்கு வாக்களித்திருக்க, தனது மனைவியையே நாடுகடத்த அதிகாரிகள் திட்டமிட்டுள்ளதால் அவர் கோபமடைந்துள்ளார்.

சிந்தியா ஆலிவெரா என்ற மேற்படி பெண்ணை 10 வயது இருக்கும் போது, அவரை சட்டவிரோதமாக






அவரது பெற்றோர் அமெரிக்காவுக்கு அழைத்து வந்துள்ளார்கள்.

25 ஆண்டுகளாக அமெரிக்காவில் வரி செலுத்தி அமெரிக்க குடிமக்களான தன் கணவர் மற்றும் பிள்ளைகளுடன் வாழ்ந்துவரும் சிந்தியாவுக்கு, 2024ஆம் ஆண்டில், அமெரிக்காவில் சட்டப்படி வாழ அனுமதிய C02

# கனடா குடியுரிமையை கைவிடும் இந்திய வம்சாவளி இளைஞர்!

கனேடிய குடியுரிமைப் பெற்றுள்ள இந்திய வம்சாவளி இளைஞர் ஒருவர் மீண்டும் இந்தியாவிற்கே சென்று குடியேற விரும்புகிறார்.

தனது வாழ்க்கையில் நிறைவு இல்லை எனக் கூறி கனடாவில் குடியுரிமை பெற்ற 25 வயது இந்திய வம்சாவளிய ஒருவர், இந்தியாவுக்கு முழுமையாக திரும்பத் தயார் என சமூக வலைதளத்தில் உருக்கமான பதிவு ஒன்றை பகிர்ந்துள்ளார்.

Gurgaon இல் பிறந்து வளர்ந்த இந்த நபர், தற்போது கனடா குடியுரிமை மற்றும் OCI (Overseas Citizenship of India) வைத்திருக்கிறார்.

வீடு இருக்கிறது, வேலை இருக்கிறது. ஆனால் மனநிறைவு இல்லை என அவர் உருக்கமாக தெரிவித்துள்ளார்.

கடைசியாக 10 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா வந்தபோது ஏற்பட்ட கடந்தகால இனிமையான நினைவுகள், அவரை 10 முறை இந்தியா வர வைப்பதற்கு காரணமாக அமைந்துள்ளது.



சிறு வயதில் அனுபவித்த உணர்வுகள் அனைத்தும் மீண்டும் வந்தது என பதிவிட்டுள்ளார்.

தனது பெற்றோர்கள் இந்தியாவில் வீடு வாங்க தயாரில்லை என்பதையும், தான் தனியாக குறைந்த விலையில்வீடுவாங்கதிட்டமிட்டுள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் ஒரு சிறிய தொழில் தொடங்கி, பின் பரம்பரைச் சொத்தின் மீது நம்பிக்கை வைத்து வாழ விரும்புகிறார்.

மேற்கத்திய நாடுகளில் வாழும் வாழ்க்கையை விமர்சித்து, இந்தியாவிலும் குறைகள் இருக்கின்றன, ஆனால் மேற்கத்திய நாடுகளும் சந்தோஷமான வாழ்க்கையை உறுதி செய்யாது என குறிப்பிட்டுள்ளார்.

திருமணமே வேண்டாம் என்று முடிவெடுத்துள்ளார். குடும்பத்தில் திருமணத் தொடர்பான பல பிரச்சனைகளை பார்த்து விட்டேன். எனவே, நான் திருமணம் செய்து கொள்ள விரும்பவில்லை என பதிவிட்டுள்ளார்.

இத்தகவல் வைரலாக பரவி, பலரிடையே விவாதத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு பயனர், உங்களுக்கு சந்தோஷம் தருமென நினைத்தால் செய்யுங்கள். மற்றவர்களது கருத்துகளில் குழப்பமடைய வேண்டாம் என கருத்து தெரிவித்துள்ளார்.



## கனேடிய...

( C01 தொடர்ச்சி)

இந்தத் திட்டம் குறைந்த வருமானம் கொண்ட தொழிலாளர்கள் மற்றும் குடும்பங்களுக்கு கூடுதல் நிதி உதவியை வழங்குகின்றது.

இதற்கமைய, தனியாக வாழ்பவர்கள் 1,633 டொலர்கள் வரையிலும் குடும்பங்கள் 2,813 டொலர்கள் வரையிலுமான நிதி உதவியை பெறுவார்கள்.

மேலும், அவர்கள் ஊனமுற்றோர் துணைத் தொகைக்குத் தகுதி பெற்றால் கூடுதலாக 843 டொலர்களை பெறலாம்.

இந்த கொடுப்பனவுக்கு தகுதி பெற நீங்கள் ஆண்டு முழுவதும் கனடாவில் வசிக்க வேண்டும் என்பதோடு 19 வயது அல்லது அதற்கு மேற்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

நீங்கள் பெறும் தொகை உங்கள் வருமானத்தைப் பொறுத்தது என்பதோடு நீங்கள் அதிகமாக சம்பாதித்தால், உங்களுக்கான கொடுப்பனவுகள் நிறுத்தப்படும்.

2024 இல் ஏற்கனவே பணம் பெற்றிருந்தால் நீங்கள் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டியதில்லை. உங்கள் வரிகளை சரியான நேரத்தில் தாக்கல் செய்து சரியான படிவங்களை நிரப்பவும்.

ஜூலை 11, ஒக்டோபர் 10 மற்றும் ஜனவரி 9 என வருடத்தில் கொடுப்பனவுகள் மூன்று பகுதிகளாக வரும்.

உங்கள் கொடுப்பனவு கிடைக்கவில்லை என்றால், நீங்கள் தகுதி பெறுகிறீர்களா என்பதைச் சரிபார்த்து, கொடுப்பனவு திகதிக்குப் பிறகு சுமார் 10 வணிக நாள்கள் காத்திருக்கவும். பிரச்சினை தொடர்ந்தால், உதவிக்கு கனடா வருவாய் நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளவும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## 25 ஆண்டுகளாக...

( C01 தொடர்ச்சி)

ளித்திருந்தார் முந்தைய அமெரிக்க ஜனாதிபதியான ஜோ பைடன்.

இதற்கிடையில், ஏற்கனவே, கிரீன் கார்டுக்காக, அதாவது, சட்டப்படி நிரந்தர குடியிருப்பு அனுமதிக்காக விண்ணப்பித்திருந்தார் சிந்தியா.

இந்நிலையில், கிரீன் கார்டு தொடர்பான நேர்காணலுக்காக ஜூன் மாதம் 13ஆம் திகதி கலிபோர்னியாவுக்குச் சென்றிருந்தார் சிந்தியா.

நடந்தது என்னவென்றால், நேர்காணலுக்குச் சென்ற சிந்தியாவை புலம்பெயர்தல் அதிகாரிகள் பிடித்து தடுப்புக்காவலில் அடைத்துவிட்டார்கள்.

சட்டவிரோதமாக அமெரிக்காவில் தங்கியிருப்பவர்களை நாடுகடத்தும் ட்ரம்பின் நடவடிக்கைகளின் கீழ், சிந்தியாவை நாடுகடத்துவதற்கான முயற்சிகள் துவக்கப்பட்டுள்ளன.

தானும் தன் கணவரும் கனடாவுக்குச் செல்ல விமான டிக்கெட்டுக்கான பணம் செலுத்தவும் தயார் என்று கூறியுள்ள நிலையிலும், அதிகாரிகள் தரப்பிலிருந்து அவருக்கு எந்த பதிலும் இல்லை.

தான் ட்ரம்புக்கு வாக்களித்தும், தன் மனைவியை நாடுகடத்த ட்ரம்ப் நிர்வாகம் முயன்றுவருவதால் கோபமடைந்துள்ள சிந்தியாவின் கணவரான ஃப்ரான்சிஸ்கோ ஆலிவெரா, தான் ட்ரம்புக்கு அளித்த வாக்கைத் திருப்பித் தரவேண்டும் என்கிறார்.




# கனடாவின் கெலோனா பகுதியில் விமானப் போக்குவரத்து பாதிப்பு

கனடாவின் கெலோனா பகுதியில் விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

பிரிடிஷ் கொலம்பிய மாகாணத்தின் கெலோனா சர்வதேச விமான நிலையத்தை சுற்றியுள்ள வான்வழி, தீவிரமாக பரவி வரும் காட்டு தீ காரணமாக மூடப்பட்டுள்ளது.

கிழக்கு கெலோனா பகுதியில் உள்ள எலிசன் மலைப்பகுதியில் ஏற்பட்டுள்ள தீ பரவல் காரணமாக, அனைத்து வருகை மற்றும் புறப்பாட்டுச் சேவைகளையும் நிறுத்துமாறு பிரிட்டிஷ் கொலம்பிய காட்டுத்தீயணைப்பு பிரிவு உத்தரவிட்டது.

நாங்கள் நிலைமையை தொடர்ந்து கண்காணித்து, தேவையான புதுப்பிப்பு அறிவிப்புக்களை வழங்குவோம் என விமான நிலையம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

மாலை 5 மணிக்கு பின்னர் வெளியான புதுப்பிப்பு அறிக்கையின் படி, தீ பரவல் தற்போது இரண்டு ஹெக்டேரை கடந்துள்ளதாகவும், அது கட்டுப்பாடற்ற நிலையில் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

தீவிரமாக பரவும் இந்த தீ, மனிதச் செயலால் ஏற்பட்டதாக சந்தேகிக்கப்படுகிறது.

கிழக்கு பகுதியில் உள்ள போஸ்டில் ஏரி நோக்கி தீ பரவியதால், அதனை சுற்றியுள்ள ஏரிகள், குடில்கள் மற்றும் முகாம்கள் கூட அபாயத்திலுள்ளன.

எலிசன் பிரதேசத்திற்கு மேலுள்ள பகுதிகளில் உள்ள மக்களுக்கு, முன்னெச்சரிக்கையாக வெளியேறுமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

பொதுமக்கள் எந்த வகையிலும் இந்த தீ பாதிக்கப்பட்ட பகுதிக்குள் நுழைய அனுமதிக்கப்படமாட்டார்கள் என பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# கனடாவில் இடம்பெற்ற விபத்தில் 5 பேர் காயம்



கனடாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஐந்து பேர் காயமடைந்துள்ளனர்.

வட ஸ்கார்பரோவில், மதுபானம் அருந்தியதாக சந்தேகிக்கும் வாகன சாரதி, நிறுத்தியிருந்த பல வாகனங்களையும், ஒரு பாதசாரியையும் மோதிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்த சம்பவம், இரவு 9 மணி அளவில் மில்லிகன் பகுதியில், பாஸ்மோர் அவென்யூ மற்றும் மிடில்ஃபீல்ட் சாலைக்கு அருகில் நடந்தது.

இந்த விபத்தில் 10 வாகனங்கள் சேதமடைந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சில வாகனங்களில் மக்கள் இருந்தபோதும், அந்த வாகனங்களை மோதி தாக்கியதாகக் கூறப்படுகிறது.

சம்பவத்திற்கு பிறகு, அந்த சாரதி தப்பிசெல்ல முயன்றாலும், அவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சாரதி ஒரு ஆண் என்பதைத் தவிர வேறு தகவல்கள் எதுவும் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

சம்பவ இடத்தில் 7 பேரை பரிசோதித்தனர், அவர்களில் 5 பேர் அருகிலுள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

அதேவேளை, ஒரு பெண் பாதசாரியும் மோதப்பட்டு சிறிது காயங்களுடன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

அனைவருக்கும் ஏற்பட்ட காயங்கள் லேசானவை என மருத்துவமனை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.